**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No.243/2013

Deposition Of Witness for { Prosecution PW 2 / Defense / Court

Name: பேச்சிமுத்து

Husband Name / Father's Name

Village

Taluk

Religion: Muslim/Christian/Hindu

Age: /2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of March 2021.

நான் பிள்ளையார்குளத்தில் வசித்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் சுடலைமாடி தெரியும் என்னுடைய பக்கத்து வீட்டுகாரர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை தெரியும் உறவினர்கள். தேதி மாதம் வருடம் ஞாபகமில்லை காலை 9.00 மணியளவில் அவருடைய வீட்டருகில் வைத்து ஆஜர் எதிரிகளுகம் சுடலைமாடியும் சண்டை போட்டார்கள் எதற்காக சண்டை போட்டார்கள் என தெரியாது நான் இருவரையும் சண்டைபோடாதீர்கள் என கூறினேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

போலிஸ் விசாரணையின் போது கடந்த 12.04.2013 ம் தேதி காலை 7.00 மணியளவில் பெருமாள் வீட்டருகில் வைத்து சுடலைமாடி பாத்திரம் கழுவிய போது எதிரிகள் அவரை கெட்ட வார்த்தையால் பேசி கம்பால் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும் கொன்றுவிடுவேன் என மிரட்டி மரண பயம் ஏற்படுத்தியதாகவும், சம்பவத்தை நீங்கள் நேரில் பார்த்ததாகவும் போலீசார்விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் உறவினர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.243/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | பெருமாள் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of March 2021.

நான் பிள்ளையார்குளத்தில் வசித்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் சுடலைமாடி என்னுடைய மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியாது. தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் காலை 9.00 மணியளவில் வீட்டிற்கு பின்புறம் உள்ள காலி இடத்தில் என் மனைவி பாத்திரம் கழுவி கொண்டிருக்கும் போது எதிரி சாமி அந்த இடத்தில் பாத்திரம் கழுவ கூடாது என்று கூறினார். நான் பாத்திரம் கழுவுவோம் என சொன்னேன் பாத்திரத்தை தூக்கினேன் அப்போது எதிரி சாமி கம்பை வைத்து என்னை அடிக்க வந்தார் என் மனைவி தடுக்க அவர் மீது மண்டையின் வலதுபுறத்தில் அடிபட்டது. பின்னர் என் மனைவியை முனைஞ்சிபட்டி மருத்துவமனை அழைத்து சென்றோம் பின்னர் அங்கிருந்து ஐகிரவுண்ட் மருத்துவமனை அழைத்து சென்றோம். என்னை சாமி கம்பை வைத்து என்னுடைய இடது தோள்பட்டையில் அடித்தார். என்னுடைய மனைவி இறந்துவிட்டார். காட்டப்படும் புகார் வாக்குமூலம் என் மனைவி அளித்தது தான் அந்த புகார் வாக்குமூலத்தில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்து உள்ளேன் அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.